உ

கடவுள் துணை.

நூதன

மிட்டாய் பாட்டு.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமைது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

விளம்பரம்.

அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக் கதை, பாரீசுகதை, குலோபகாவலிகதை நான்கு பக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் செலக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றுதிரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது ஏற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவதுமன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச் செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸ்காகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா 1 0 0

உ

கடவுள்துணை.

நூதன

மிட்டாய்பாட்டு.

விநாயகர் துதி.

நேரிசைவெண்பா.

பேரின்பவீடதனைப் பேணியளிக்குமிட்டாய்
சீரின்பமாமிதனைச் செப்பவே-கோரின்பம்
சித்திதரும்முத்திதரும் செல்வவிநாயகனைப்
பத்தியுடனே தொழுதக் கால்.

சிந்து.

அமிர்தாஞ்சித யிங்கிர்தமிட்டாய்
அன்னமேநீ வாங்குமிட்டாய்
தவமுனிவர் புகழுமிட்டாய்
தையலர்க்கு யேற்றமிட்டாய் அமி

சீனிப்பாகுச் சிறந்தமிட்டாய்
சித்தரெல்லாம் புகழுமிட்டாய்
நானுனக்குச் சொன்னமிட்டாய்
நாரிப்பாக மானமிட்டாய் அமி

அப்பரர் சுந்தரர் மாணிக்கவாசகர்
அழகுசம்பந்தர் புகழுமிட்டாய்
கற்பகமே யுண்ணுமிட்டாய்
கலியுகத்தோ ரேற்றுமிட்டாய் அமி

மாயவலையை யறுக்குமிட்டாய்
மாரனையுங் காய்ந்தமிட்டாய்
நேயமாகும் நெய்யிமிட்டாய்
நீயேவாங்கும் பெண்ணேமிட்டாய் அமி

மனத்துயரைப் போக்குமிட்டாய்
மங்கைபாக மானமிட்டாய்
சினத்தையு மறுக்குமிட்டாய்
சித்திரமே வாங்குமிட்டாய் அமி

கண்ணப்பர்க் கருளுமிட்டாய்
காட்சியது கொடுக்குமிட்டாய்
உண்ணவுண்ண ருசிக்குமிட்டாய்
உத்தமியே வாங்குமிட்டாய் அமி

நாலுவேத மானமிட்டாய்
நல்லபத மளிக்குமிட்டாய்
மேலோர்கள் புகழுமிட்டாய்
மின்னிடையே வாங்குமிட்டாய் அமி

பர்ப்பிதூத்படா ஒணுக்கல்மிட்டாய்
பதவியளிக்கும் சக்கலரமிட்டாய்
குறிப்பறிந்துக் கொள்ளுமிட்டாய்
கோரும்வரங் கொடுக்குமிட்டாய் அமி

அகிலமெல்லாம் நிறைந்தமிட்டாய்
அரிவையர்க்கு யேத்தமிட்டாய்
இகபர மளிக்குமிட்டாய்
யேந்திழையே பூந்திமிட்டாய் அமி

இமூர்த்தி சிலேபிமிட்டாய்
இனிமையான லட்டுமிட்டாய்
நம்பியிதைக் கொள்ளுமிட்டாய்
நாயகமே தருந்தமிட்டாய் அமி

அந்தியிலே வாங்குமிட்டாய்
சந்தையிலே திரியுமிட்டாய்
சொந்தமான சுகிர்தமிட்டாய்
பந்தமதை யறுக்குமிட்டாய் அமி

பாலுமலுவா பன்னீர்மிட்டாய்
பாவப்பிணியை யறுக்குமிட்டாய்
வேதன்மாலுந் தேடுமிட்டாய்
வஞ்சியரே வாங்குமிட்டாய் அமி

திரைமுழுதும் நிறைந்தமிட்டாய்
மறைமுனிவர் புகழுமிட்டாய்
அரிந்தவர்க்கே சிறந்தமிட்டாய்
ஆசைகண்ணே வாங்குமிட்டாய் அமி

மனோரஞ்சித மானமிட்டாய்
மங்கையேபால் கோவாயல்வா
வனமயிலே பூரிமிட்டாய்
வதிரசமே வாங்குமிட்டாய் அமி

முந்திரிபருப்பு அவலுநொக்கல்
மெத்தருசியாஞ் சீனிமிட்டாய்
தொந்தமாகத் தொடருமிட்டாய்
தொடுக்கவச மாகுமிட்டாய் அமி

காராசேவு வோம்பொடி
காரமுள்ள பொகடாதுடி
நேராநெய்யில் செய்தபடி
நேரிழையே வாங்காயடி அமி

மின்னலைப்போல வேஜொலிக்கும்
மேதினியாசை தனைவிலக்கும்
கன்னியரே தேடக்கிடைக்கும்
காசியும்வேண் டாகமக்கும் அமி

விரைவில்லை யிலாதமிட்டாய்
நேர்த்தியாங் கற்கண்டுமிட்டாய்
அறிந்தவ ரறிந்தமிட்டாய்
அனேகவித மானமிட்டாய் அமி

கையைவீசி கடைக்குப்போர
கன்னியரே யிந்தமிட்டாய்
மெய்யிலுள்ள பிணியறுக்கும்
மெல்லியரே வாங்குமிட்டாய் அமி

பிறவியறுக்கு மிட்டாய்
பூதலமைந்து வானமிட்டாய்
அறியார்க்கு மறிந்தவர்க்கும்
ஆனந்தங் கொடுக்குமிட்டாய் அமி

குணத்தைப் பெருக்குமிட்டாய்
கூட்டுறவு செய்யுமிட்டாய்

பணச்செலவு மில்லாமலே
பாவையரே கிடைக்குமிட்டாய் அமி

பிள்ளைக்கரிக் கேட்டமிட்டாய்
பேரின்ப மளிக்குமிட்டாய்
உள்ளமது களிக்குமிட்டாய்
உண்மையாக மானமிட்டாய் அமி

செஞ்சியே காம்பரமுஞ்
சிற்றறிவின லுரைத்த
ரஞ்சித மிட்டாய்பாட்டை
வஞ்சியே யுலகரிய. அமி

நூதன மிட்டாய்பாட்டு,

முற்றிற்று.

———